**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 02—ம்** தேதி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடலூர், நீலகிரி மாவட்டம், **அசல் வழக்கு எண்.3/2016** 1973ஆம் ஆண்டு ஆணையுறுதி ஆவணச் சட்டம் 10வது விதியின் படி திருமதி. A. மகேஸ்வரி, தலைமை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

பெயர் : **திரு. முகுந்தன் (PW -2)** கிராமம் : எருமாடு
தந்தை பெயர் : திரு. வேலு தாலுக்கா : பந்தலூர்
ஜாதி : – மாவட்டம் : நீலகிரி
தொழில் : – வயது : 46/2026

---

**02.04.2026**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**1).** என்னுடைய தாத்தா பெயர் ஒன்டன். என் பாட்டி பெயர் கோடாங்கி (எ) காக்கி ஆவார். என் அப்பா வேலு இறந்து 4, 5 ஆண்டுகள் ஆகிறது. என் அப்பாவின் சகோதரர் கரியன் உயிருடன் தான் இருக்கிறார். கரியனை விசாரித்தால் என்னுடைய தாத்தா, பாட்டி பெயர் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி ஊர்வசி கிட்டனின் உடன்பிறந்த சகோதரி என்று சொன்னால் சரிதான். என் பாட்டி காக்கிக்கும், தாத்தா ஒன்டனுக்கும் பிறந்தவர்கள் தான் கிட்டன், ஊர்வசி(பிரதிவாதி) என்று சொன்னால் சரிதான். என்னுடைய அப்பாவின் உடன்பிறந்த சகோதரர் கரியன் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**2).** கிட்டன் உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. கிட்டனை கூடலூருக்கு உயில் எழுதுவதற்காக யார் அழைத்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்தசமயத்தில் நான் சிறுவனாக இருந்தேன். நான் 10ஆம் வகுப்பு படித்திருக்கிறேன். நான் குடியிருக்கும் குடியின் பெயர் காப்பு குன்னு ஆகும். காப்பு குன்னுக்கு ஒரு மூப்பன் இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். தற்போது மூப்பனாக என்னுடைய பெரியப்பா கரியன் இருந்து வருகிறார். கரியனுக்கு முன்பு மூப்பனாக சாமி என்பவர் இருந்தார். அவர் 2 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார்.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.04.02 17:08:29 +0530

**3).** குழந்தைகள் இல்லாமல் ஒருவர் இறந்தால் எங்கள் குடியில் உடன்பிறந்த சகோதரர் இறுதி காரியம் செய்வார். அவர் இல்லை என்றால் குடும்ப உறுப்பினர்கள் யார் வேண்டுமானாலும் இறுதி காரியம் செய்வார்கள். ஆறுமுகம் என்ற மேற்பார்வையாளர் எருமாடு கிராமத்தில் இருந்தார் என்று சொன்னால் அவர் பற்றி எனக்கு தெரியாது. கேள்வி பட்டிருக்கிறேன். அவர் கோயம்புத்தூரை சேர்ந்த நபர் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**4).** என்னுடைய சகோதரர் வாதி சுகுமாரன், ஊர்வசி மற்றும் என்னுடைய தகப்பனார், என்னுடைய பெரியப்பா கரியனுக்கு எதிராக ஒரு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்கள் குடியில் குழந்தையை தத்தெடுத்தால் குடி மூப்பனுக்கு தெரிந்து தான் தத்தெடுப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. கிட்டன் வாதியை தத்தெடுத்ததாக பொய்யாக முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி கிட்டனுக்கு தெரியாமல் வஞ்சனை செய்து உயில் ஆவணத்தை திட்டமிட்டு தயார் செய்திருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.04.02 17:08:33 +0530